Released by Maran's Dog ,Toronto, Canada

ஸ்ரீ

## ஆகமம் படிப்பதற்கும் ஆகம புஸ்தகங் களுக்கும் தொடர்பு கொள்ளவும்

1. பாஞ்சராத்திர ஆகமஸாரம் Rs. 6.00
2. பாத்மோக்த பகவதாராதனம் Rs 6.00
3. ஸ்ரீ லக்ஷ்மீ கடாக்ஷம் Rs 6.00
4. அக்னிமுகம் (ஹோமவிதி) Rs. 5.00
5. ஸ்நானங்களின் மகிமையும் மந்திரமும் Rs. 5.00
6. நவக்கிரஹ ஆராதனமும் கிரஹண மகிமையும் Rs. 4.00

தபால் செலவு தனி

**B. முரளீதரன்**

**ஸ்ரீதர கண்ணன் பதிப்பகம்**

2. நேதாஜி ரோடு பாப்பநாயக்கன் பாளையம்

கோயமுத்தூர் - 37.

Released by Maran's Dog ,Toronto, Canada



### லோகா: ஸமஸ்தா: சுகினோபவந்து

ஆராதகர்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக இருப்பது மிகவும் அவஸ்யம். உபதேசம் செய்வதைக் காட்டிலும் செயலி-ல் ஈடுபட்டால் அதுமிக சீக்கிரமாக மனதில் பதியும். ஆகை-யால், ஆராதகர்கள் நித்யகர்மானுஷ்டானங்களை காலம்தவறாமல் விதிப்படி முடிப்பது மற்றவர்கள் மனத்தைக் கவரும். அவரிடம் நல்ல மதிப்பும் ஏற்படும். நமக்கும் நல்லது. சந்தியா வந்தனு-திகளை காலம் தவறாமல் செய்து வந்தால் அது நம்மை மிக எளிதில் முன்னேற்றம் அடையச் செய்யும். ''காணாமல் கோ-ணாமல் கண்டு கொடு'' என்பார்கள். அதாவது காலையில் சூரிய உதயத்திற்கு முன்னும் நடுப்பகலிலும், மாலையில் சூரியன் மறைவதற்கு முன்னும் நாம் அர்க்கயம் விட்டு காயத்திரியை ஜபித்து வந்தால் நம் உடலும்,மனமும் சுத்தமாகும். அது போ-லவே நாம் சன்னதியிலும் நடந்து வந்தால் நமது மனம் சுத்தமாவதுடன் மற்றவர்களுக்கும் நாம் பக்தியை உண்டாக்கி-னவர்களாக ஆகலாம்.

ஆகமம் படிப்பது மிகவும் கஷ்டம். அதுமாதிரி நடக்கவும் சாத்தியமாகாது என்று சிலர் சொல்வது காதில் விழுகிறது. உதாரணத்திற்காக ஒன்றை கவனியுங்கள்.

ஒரு சின்ன குழந்தைக்கு கல்கண்டின் சுவை தெரியாமல் இருக்கும்போது அதனிடம் கல்கண்டை கொடுக்கப் போனால் அது என்னமோ ஏதோ யென்று நினைத்து வேண்டாம்,வேண்டாம் என்று சொல்லிக்கொண்டே ஓடும். அப்போது அதைபிடித்து நிறுத்தி அதன் வாயில் கல்கண்டை வைத்துவிட்டால் அதன் பிறகு அதன் சுவையை அறிந்த குழந்தை தினமும் தானாகவே ஒளித்து வைத்திருந்தாலும்கூட அக்கல்கண்டை திருடியாவது தின்ன ஆரம்பித்துவிடும். அதுபோல பகவதாராதனம் முதலிய-வைகள் கசப்பாகவும், வெறுப்பாகவும் தோன்றினாலும் அதன் சுவையை ஊட்டிவிட்டால் அவர்கள் அந்த இன்பமயமான பக-வத் கைங்கர்யங்களை செய்வதுடன் அச்சுவையை விடவேமாட்-டார்கள் என்பது தான் உண்மை

கங்கைக்கரையிலே தாகமில்லாத ஒருவன் கங்காஜலத்தை அள்ளி,அள்ளி குடிக்கிறான். அப்போது தாகமுள்ள ஒருவன் அங்கே நின்றுகொண்டு குடிக்கலாமா? வேண்டாமா? என்று நினைப்பான். அதுபோல் உலகபந்தங்களை எல்லாம் தவிர்த்த சாண்டில்யாதிமகரிஷிகள் ஆகமஸாஸ்திரங்களை ஆராய்ந்து அப்பியசித்துக்கொண்டு இருக்கும்போது ஸம்ஸாரஸாகரத்தில் ஈடுபட்ட நாம் இதை உணராமல் இருக்கலாமா? என்பதை சிந்தியுங்கள்

கங்கையைப்போல் பரமபாவமான ஆகம ஸாஸ்திரம்

ஜன்னுமகரிஷி கங்கையை வாயால் குடித்து காதால் வெளியிட்க டார். பகீரதனுக்காக. அதுபோல் நாமும் ஆகமஸாஸ்திரங்களை காதால் குடித்து(கேட்டு) வாயால் விடுவோம்(மற்றவர்களுக்கு உபதேசிப்போம்)

ஆகமம் பல இருக்கின்றன, ஒவ்வொன்றும் ஒவ்வொருவகையில் பேசுகின்றன. சிற்சில இடங்களில் நமக்கு சந்தேகங்களும் ஏற்படுகின்றன. எனினும் அவைகளெல்லாம் சிறப்பாக பகவானுடைய ஆராதனத்தையே பேசுகின்றன. மூலமந்திரங்களையும் மற்றமந்திரங்களையும் மாற்றவில்லை.

தற்காலம் நம்நாடு பலவிதமான இன்னல்களில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறது. அவைகளைப்போக்கி ஜன சமூகத்தை காப்பாற்ற வேண்டியது ஆராதகர்களாகிய நமது கடமை. முன்பெல்லாம் எல்லா சன்னதிகளிலும் ஆராதனத்தின் முடிவில் ''லோகா ஸமஸ்தா சுகினோ பவந்து'' என ஆசி வழங்குவார்கள். அதனுல் நாடு ஒரு வகையில் சுபிக்ஷமாகவே இருந்து வந்தது. தற்சமயம் நாம் அதை மறந்து விட்டோம். ஆராதகர்களாகிய நாம் ஆகமம் அறிந்து அதன்படி பகவானை ஆராதித்து அவரை திருப்திபடுத்தினுல் உலகம் தானே செழிக்கும்! இதில் சிறிதளவும் சந்தேகமே இல்லை.

சுபமஸ்துநித்யம்

ஆசிரியர்

ஸ்ரீ

ஆகமம்; பாஞ்சராத்திரம்

பகவத் ஸன்னதி உள்ள இடங்களை இரண்டு விதமாக பிரிக்கலாம். ஒன்று சித்தம் இரண்டு அஸித்தம்.

மூலே மூர்தனி சைலா நாம் நத்யாஸ் தீரேச ஸங்கமே

ஸமுத்ர தீரே புளினே ஹ்ரதே தீர்தேச காநநே! ஏதேஷு நிர்மிதம் ஸ்நானம் ஸித்தாக்யம் விஸ்வகர்மனா! தேவாதிபிரஹம்-தத்ர ஸ்தாபிதஸ் சேத்யதாவிதி!!

மலைகளின் அடிவாரம் அல்லது மலையின் உச்சி, நதியின் கரை, ஸமுத்திர ஸங்கமம், கடற்கரை, நதியின் மத்தியின்மேடு அருவி, புனித தீர்த்தஸ்தலம், காடு இவைகளில் விஸ்வகர்மாவால் கோவில் நிர்மானிக்கப்பட்டு தேவதைகளால் பிரதிஷ்டை செய்ப்பட்டிருப்பின் அது சித்தமாகும்.

மனுஷ்யே நிர்மிதம் ஸ்தானம் நகராதி கிருதம் மம!! அஸித்தாயதனம் வித்திக்கிராமாதி ஸ்திதி ஹேதுகம்!! நகரம் கிராமம் இவைகளில் மனிதர்களால் கோவில் நிர்மாணிக்கப்பட்டு மனிதர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்தலங்கள் அசித்தம்



அல்லது மானுஷம் எனப்படும்.

கோவிலை நிர்மாணிக்க முதலில் இடத்தை பரிசோதனை செய்து தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்ந்தெடுக்க போகும் போது எஜமானர், ஆசாரியர், ஜோதிடர், ஸ்தபதி வேதபாராயணக்காரர்களுடன் நற்சகுணங்களை பார்த்துக் கொண்டு புறப்படவேண்டும்.

பூமியை நான்கு வகையாக பிரித்துள்ளார்கள். அவை ஸுபத்மா,-பத்ரகா-பூர்ணா-தூம்ரா என நான்கு வகைப்படும்.

**ஸுபத்மா பூமி:-**

சம்பகா கரு கற்பூர கதம்ப திலகார்ஜுனை:! க்ரமுகை: நாரிகேரைஸ்ச்ச குசகாசை: ஸமாவிருதா! பத்மோத்பல ஸமாகீர்ணப்ராகுதக் ப்ரபணா சுபா! யாசதோயா விருதா பூமிஸ்ஸா சுபத்பேதி கீர்திதா!!

செண்பகமரம் அகில்மரம், கற்பூரமரம், மஞ்ஜாடிமரம், மருதமரம், பாக்குமரம், தென்னைமரம், குசம், நாணல் இவைகளால் சூழப்பட்டதும், தாமரைபுஷ்பம் உள்ள குளங்களோடு கூடினதும் மேற்கிலிருந்து கிழக்காகவும் தெற்கிலிருந்து வடக்காகவும் சிறிது தாழ்ந்த நிலையுள்ளதாயும், நாற்புறமும் ஜலம் நிறைந்ததாயும் உள்ள இடம் ஸுபத்மா எனப்படும்.

**பத்ரகா பூமி:-**

நதீ ஸாகர பார்ஸ்வஸ்தா தீர்த்தாயத மாஸ்ரிதா! க்ஷீர விருக்ஷ ஸமாகீர்ணா பலவிருக்ஷ ஸமாகுலா! உத்யா நோபவநோ பேதாலதாகுல்மஸமாவிருதா யஜ்நவிருக்ஷா: குசா: காஸா: வ்ரீஹிக்ஷேத்ரந்து யத்ரவை! அதோ ஜல ஸமோபே தாபத்ரக- இதி ஸா ஸ்மிருதா!

நதி, சமுத்திரம், இவைகளின் ஸமீபமாகவும், தேர்ந்தெடுக்கும் இடத்திற்கு சிறிது தூரத்திலே ஜலம் கிடைக்ககூடியதாகவும், பாலுள்ள மரங்கள் உள்ளதாயும் கனிதரும் மரங்கள் உள்ளதாயும் அடர்ந்ததாயும், உத்யானம், நந்தவனம், செடிகள், கொடிகள், இவைகள் யஜ்ஜவிருக்ஷங்கள் நிறைந்ததும் குசம், நாணல், நெல்வயல் இவைகளோடு கூடினதும் கீழே நீருள்ள பூமியாயும் இருப்பது பத்ரகாபூமி எனப்படும்.

**பூர்ணா பூமி;-**

குளுத்த நிம்பநிஷ்பாவ கோத்ரவச்யாமகான்விதா!! கிரிபார்ஸ்வஸ்திதா சைவகிரி சேகரமாஸ்ரிதா! [illegible]

பூர்ணேதி [illegible]

கொள், வேம்பு, மொச்சை, வரகு, சாமை, இவைகளோடு கூடினதும், மலைப்பக்கமுள்ளதும், மலையின் உச்சியிலுள்ளதும் ஜலமில்லாததும் ஆனது பூர்ணாபூமி எனப்படும்.

## தூம்ரா பூமி:-

யவவேண்வாதி ஸங்கீர்ணா ஸ்நுஹி ஸ்லேஷ்ம கான்விதா!! விபீத கார்க ஸங்கீர்ணா கடிநா சர்கரான்விதா! வாயஸ ச்யே நக் ருதராட்யா கோமாயு வ்ருகஸங்குலா உஷராத்யை, ஸமோ பேதா ஸா தூம்ரேதி ப்ரகீர்திதா!

யவம், மூங்கில்கூட்டம், சதுரக்கள்ளி துர்கந்தம் கடுசர்க்கரை இவைகள் உள்ளதும், காக்கை கழுகு பருந்து நரி நாய் இவைகள் உள்ளதும் உளர்மண்ணோடு கூடினதுமான பூமி தூம்ரா எனப்படும்.

## அவைகளின் பலன்;-

ஸுபத்மா சாந்திதாபூமி சுகதா பத்ரகா பவேத்! ஸுபூர்ண புஷ்டிதாபூமி க்ஷயதா தூம்ரகா பவேத்!!

சுபத்ரா சாந்தியையும், பத்ரகா நல்ல சுகபோகத்தையும், பூர்ணா ஆயுராரோக்யாஸ்வர்யத்தையும் செழிப்பையும் உண்டா-க்கும்

சுபம்

ஆகமப்ரவிண N. ரங்கராஜப்பட்டர் ஸ்ரீரங்கம், ஆகமஸார்பௌம அ. வை பெரியதிருவடி ஸ்வாமிகள் காஞ்சி வித்வான் அலங்காரம், தேவராஜ அய்யங்கார் ஸ்ரீவில்லிபுத்தூர் மஞ்சரியின் முன்னால் உதவிஆசிரியர் K. தாமோதரன் கோவை வேதாந்தவித்வான், G. ராதாகிருஷ்ணபட்டர் சன்னபட்டணா ஆகிரோர் ஆசிரியர் குழுவில் சேர்ந்து பத்திரிக்கையை நடத்திவர தங்கள் முழு ஆதரவையும் அனுமதியையும் அளித்துள்ளார்கள்

கல்பதரு வருட சந்தா..................ரூ10-00
தபால்மூலம்...............ரூ. 18.50

கல்பதரு அலுவலகம்
2 நேதாஜி ரோடு
பாப்பநாயக்கன் பாளையம்
கோயமுத்தூர் 37.



## ஆகமம் - வைகானஸம் சென்ற இதழ் தொடர்ச்சி:-

''வர்ணயுக்தம் ப்ரதானம் ஸ்யாத் த்ருவபேரம் ஸலக்ஷணம் அநர்ச்யம் த்ருவபேரம் தத் ஜல புஷ்பானுலேப நை:!! வர்ண-ஹீநம் த்ருவம் பேரம் யதிகுர்யாத் விநஸ்யதி!

என்ற வாக்சிய பிரமாணங்களால் மூலபேரர் வர்ணம் அல்-லது தைலம் பூசப்பட்டு இருந்தால் அந்த மூலவர் ''த்ருவபேரர் என்றும் அந்த பேரரின் சமீபம் இருக்கும் உலோக ஜ பிம்பம் ''கௌதுகர்'' என்றும் அந்த சன்னதியில் நித்யம் ஆவாஹனம், விஸர்ஜனம் ப்ரதானமான த்ருவபேரா ராதனம் தான் செய்ய வேண்டும். அதற்கு பஹுபேராராதனம் என்று பெயர்.

இனி ஏகபேரம் அல்லது துருவார்ச்சா பேரம் சொல்லப்படு கிறது. ''த்ருவார்ச்சாபேர மேகந்து வர்ணஹீநம் சிலாமயம்'' எனற வாக்கியத்தின்படி மூலவர் வர்ணமோ, தைலக்காப்போ அன்னியில் நித்யஸ்நாநம் செய்யும்படியான சுத்த சிலையானல் அவர் ஏகபேரர், அல்லது துருவார்ச்சாபேரர். அவர் ஸமீபத்தில் இருக்கும் லோஹஜ பிம்பம் உத்ஸவராவார். அங்கு மூலவரிட மிருந்து ஆவாஹனமும் விஸர்ஜனமும் கிடையாது. இந்த விஷ-யங்களை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

பஞ்ச கண்டம் வெளியிடப்படுவதின் நோக்கம் மிகவும் பழ-மையானது. பஹுபேராதனத்தை மிகவும் விரிவாக பேசப்பட்டி-ருப்பதால் மிகவும் ஸம்பத்துள்ள ஆலயங்களில் நடத்தி வரும் ஷட்கால ஆராதனத்திற்கும் மந்த்ராஸனுதி ஆறு ஆஸனங்களின் உபசாரத்தை விளக்கி பேசி இருப்பதால் திருப்பதி முதலிய பெரிய திவ்யதேசங்களின் ஆராதனத்திற்கு தக்க பிரமாணமாகும் ஸ்ரீவில்லிபுத்தூர், திருமாலிருஞ்சோலை முதலிய திவ்யதேசங்-களின் ஆராதனத்திற்கு மிகவும் உபகாரமாகும்.

இந்த பஞ்சகண்டத்தில் பேசப்பட்டிருக்கும். ஆராதனக்-கிரமம் முக்காலும் ப்ருகுப்ரோக்தமான வாசாதிகாரத்தில் சொல்லப் பட்டதை அடிப்படையாக கொண்டதேயாகும்.

சிலர் இந்த பஞ்சகண்ட திருவாராதனப்படி கோவில்களில் ஆராதனம் செய்வதில்லை ஆராதிக்கவும் முடியாது என்று புறக் கணித்து வருகிறார்கள். அவர்கள் சொல்வதில் கொஞ்சம் உண் மை இருக்கிறது. கிராமங்களில் இருக்கும் சிறிய கோவில்களிலும் விபவம் இல்லாத ஸன்னதிகளிலும் பஞ்சகண்ட ஆராதனமா கிய பஹுபேராதனம் செய்ய முடியாது. அந்த ஆலயங்களுக் காகவும் பேசப்படவில்லை என்பதை அறிந்தவர்கள் பஞ்சகண்ட

ஆராதனத்தை புறக்கணிக்க மாட்டார்கள். மேலும் பஞ்சகண்டம் பேசியவர் "ந்ருசிம்மவாஜபேயர்" என்ற மகான். அவருடைய காலம் சற்றேறக்குறைய 2500 வருஷங்கள் ஆகிறது. தோழப்பருடைய ஸ்மிருதியில் ஏகோதிஷ்ட ப்ரகரணத்தில் இந்த ந்ருசிம்மவாஜபேயரைப் பற்றி தோழப்பர் சொல்லி இருக்கிறார். அந்த தோழப்பருடைய காலம் அஹோபில மடம் ஜீயரின் காலமாகும். அந்த சரித்திரப்படி பார்த்தால் ந்ருசிம்மவாஜபேருடைய காலம் 2500 வருஷங்களுக்கு மேலாகிறது. ஆகையால் இந்த பஞ்சகண்டமும் இது சமயம் வெளி வருவது நம் குலத்தோருக்கு பேருதவியாகும்.

நவநீதம் இந்த கிரந்தம் பஞ்சகண்டத்தை மூலமாகக் கொண்டு கேசவப்பட்டாசாரியார் என்ற நம் ஆச்சாரியகோஷ்டியைச் சேர்ந்த ஒரு பெரியோரால் வெளியிடப்பட்டதாகும். இந்த கிரந்தத்தை பூராவும் படித்து மனப்பாடம் செய்து விட்டால் நித்யகர்மானுஷ்டானம் திருவாராதனம் முதலிய விஷயங்களின் பெருமையும், சந்தேகமும் தெளிவுபடுத்தும் பஹுபேர ஏகபேராராதனங்களின் விபரமும் நன்கு அறிந்து கொள்ள முடியும்.

இந்த கேசவப்பட்டர் இந்த கிரந்தத்தின் ஆரம்பத்தில் சொல்லுகிறார்

"வைகானஸ மரீச்யத்ரி ப்ருகுகச்யப ஸம்மதம்! தத்ர தத்ர ஸமாஹ்ருத்ய ஸுப்ரணீதம் பஹாத்மநா!! ந்ருசிம்மவாஜபேயாக்ய ஸூரிணா பூர்வமேவஹி! டீகாம் கரோம்யஹம் தத்ர பஞ்சகண்டஸ்ய விஸ்தராத்: அர்சனா நவநீதாக்யம் கேசவேநா மிருதம்யதா!

என்று பேசி இருப்பதால் பஞ்சகண்டமும் அர்ச்சநா நவநீதமும் பஹுபேராதனத்திறகும் ஏகபேராதனத்திற்கும் மிகவும் முக்கியமென்பதும் நம்மவர்கள் ஒவ்வொருவரும் அவஸ்யம் அறிந்து கொள்ள வேண்டுமென்பதும் இன்றியமையாததாகும்.

இந்த விஷயங்களைக் கொண்ட இந்த புஸ்தகத்தை வெளியிட முன்வந்த ஸ்ரீரங்கநாதபட்டாசாரியாரின் விடாமுயற்சியும் அவர் உள்ளத்தில் எழுந்த உரியநோக்கமும் மிகவும் போற்றத்தக்கதாகும். அன்னாருக்கு நீண்ட ஆயுளும் ஆரோக்கிய திடகாத்திரமும் அருள ஆண்டவனை பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர். பொது ஜன ஊழியன்
1962 அலங்காரம்.



ஸ்ரீ

## சைவாகமம்

சைவாகமத்தைப்பற்றி எழுத பல சிவாச்சாரியர்கள் முன் வந்துள்ளார்கள். ஆரம்பத்தில் ஸ்ரீசிவஸ்ரீயுத புண்ணியகோடி சோமசுந்தர சிவாச்சாரியார், ஸ்ரீஅகரம், அமிருதேஸ்வர சிவாச்சாரியார், சித்தாந்த சரபம், ஈசான சிவாசாரியார், சைவாகம பரீக்ஷாதிகாரி, சுவாமிநாதசிவாசாரியார், ராமலிங்கசிவாசாரியார் சந்திரசேகரசிவாசாரியார், காஞ்சிஅருணாசலசிவாசாரியார் ஆகிய சிவாசாரியார்கள் முதன்முதலில் ஒன்றுகூடி விவாதித்து ஏகமனதாக தீர்மானித்து எழுதிய கணேசாலய பரார்த்த பூஜாவிதியை வாசக அன்பர்களுக்கு ஸமர்பிக்கிறேன்.

### ஷோடச கணபதி மூர்த்தங்கள்:-

| | |
|---|---|
| 1. பாலகணபதி | 2. பக்தகணபதி |
| 3. வீரகணபதி | 4. சக்திகணபதி |
| 5. ஸர்வசித்திகணபதி | 6. பிங்களகணபதி |
| 7. உச்சிஷ்டகணபதி | 8. ரக்தகணபதி |
| 9. க்ஷிப்ரகணபதி | 10. ஹேரம்பகணபதி |
| 11. லக்ஷ்மிகணபதி | 12. விஜயகணபதி |
| 13. நிருத்தகணபதி | 14. ஊர்த்வகணபதி |
| 15. மஹாகணபதி | 16. ஹரித்ராகணபதி |

### ஆவாஹனம் முதலிய முத்திரா லக்ஷணங்கள்:-

**1. ஆவாஹனீ:-**

இரண்டு மோதிரவிரலின் அடிக்கணுவில் கட்டைவிரல் இரண்டையும் சேர்த்து அஞ்ஜலியாக காண்பிப்பதற்கு ஆவாஹனம் என்று பெயர்.

**2. ஸ்தாபனீ:-**

மேற்சொன்னபடி புறங்கை மேல் நோக்கியபடி காண்பித்தல் ஸ்தாபனம்.

**3. ஸன்னிதானம்:-**

வலக்கை இடக்கை விரல்கள் நான்கையும் முஷ்டியாக பிடித்து, கட்டைவிரல் இரண்டையும் மேல் நோக்கியவாறு காண்பித்தல் ஸன்னிதான முத்திரை.

**4 ஸன்னிரோதினீ:-**

வலக்கை இடக்கை விரல் இரண்டையும் உள் அடக்கி

மற்ற நான்கு விரல்களாலும் மடக்கிய கட்டை விரல்களைச் சுற்றி முஷ்டியாக பிடித்தல் ஸன்னிரோதனம்.

### 5. அவகுண்டனம்:-

வலக்கை இடக்கை ஆள்காட்டி விரல்களை நீட்டி சுண்டு விரல், மோதிரவிரல், நடுவிரல்களை, உட்புறமாக மடக்கி திரவ்யங்களையும்: தேவதைகளையும் சுற்றி விடுவதற்கு அவகுண்ட-னம் என்று பெயர்.

### 6. திக்பந்தனம்:-

வலதுகை, நடுவிரல், ஆள்காட்டிவிரல், கட்டைவிரல் மூன்றையும் கொண்டு எட்டு திக்குகளிலும் சிட்டிகைபோடுவது திக்பந்தனம்.

### 7. தாளத்ரயம்;-

இடது உள்ளங்கையில் வலதுகை மோதிரவிரல் நடுவிரல் ஆள்காட்டிவிரல் மூன்றையும் கொண்டு மும்முறை தாளம் போடுதல்.

### 8. தேனுமுத்திரை;-

ஒன்றோடு ஒன்று இரு கைவிரல்களையும் சேர்த்து சுண்டு விரல் இரண்டையும் மோதிரவிரல் இரண்டுடன் நடுவிரல் இரண்டையும் ஆள்காட்டிவிரல் இரண்டுடனும் சேர்த்து பிணைத்து பசுவின் தோன்றும் நான்கு காம்புகளைப்போல் காண்-பிப்பதற்கு தேனுமுத்திரை என்று பெயர். இதற்க்கே சுரபி முத்திரை, அமிருதமுத்திரை என்னும் பெயர்களும் உண்டு.

### 9. பஞ்சமுகீ முத்திரை:-

வலது இடது உள்ளங்கை மேல் நோக்கியவாறு ஒன்று சேர்த்து நடுவிரல் இரண்டையும் ஆள்காட்டிவிரல் கொண்டும் சுண்டுவிரல் இரண்டையும் கட்டைவிரல் இரண்டினாலும் அமுக்கி மோதிரவிரல் இரண்டையும் நடுவில் ஸ்தம்பம் போல் ஒன்று சேர்த்து காண்பித்தால் ஐந்துமுகமாக தோற்றமளிக்கும். இது பஞ்சமுகி முத்திரை.

10 இதையே நடுவில் இருக்கும் மோதிரவிரலை பிரித்துக் காட்டினால் ஆறுமுகமாக தோன்றும். இதற்கு ஷண்முகமுத்திரை என்று பெயர்.

### 11 அங்குச முத்திரை:-

வலக்கையின் ஆள்காட்டிவிரலை தேள் கொடுக்கு போல் மடக்கி மற்ற விரல் மூன்றையும் மூடி கட்டைவிரல் கொண்டு



முஷ்டியாக பிடித்து காண்பித்தால் அங்குசத்தின் தோற்றம் தெரியும்.

### 12 மனோரத முத்திரை:-

வலக்கை, இடக்கை, சுண்டுவிரல், மோதிரவிரல், நடுவிரல் மூன்றையும் ஒன்றோடொன்று சேர்த்து ஆள்காட்டிவிரல் இரண்-டையும் நீட்டி அதன் அடியில் கட்டைவிரல் இரண்டையும் பதியவைத்து பகவான் முன்னால் காண்பிப்பதற்கு மனோரத முத்திரை என்று பெயர்.

### 13 மிருகீ:-

வலக்கை மோதிரவிரல் நடுவிரல்களை கட்டைவிரல்நுனியு-டன் சேர்த்து ஆள்காட்டிவிரல் சுண்டுவிரல்களை மேல்நோக்-கியவாறு நீட்டினால் மான்முகம் போல் தோன்றும் இதற்கு மிருகீமுத்திரை என்று பெயர். நைவேத்திய காலங்களில் உப-யோகிக்க வேண்டியது.

### 14 விநாயகருக்கு உரிய முத்திரைகள்:-

பாசம் – அங்குசம் – பஞ்சமுகீ – யோநி – த்ரிகண்டயோநி என்பனவாகும்.

### 15 அஷ்ட மங்களங்களாவன:-

குடை, ரத்நமயகும்பம், மூச்சூரு, தாமரைப்புஷ்பம், வில், யானை, சக்ராயுதம், கட்டில்கால்.

### 16 மந்த்ரம்:-

கணாநாம் த்வ கணபதிகும் ஹவாமஹே கவிங் கவீநா முப வச்ர மஸ்தமம், ஜ்யேஷ்டராஜன் ப்ரம்ஹணாம் ப்ரம்ஹ-ணஸ் பதே ஆனச் ச்ருண்வன் னூதிபிஸ் ஸீத ஸாதநம்!! மஹாகணபதயேநம: ஸர்வோபசாரான் ஸமர்பயாமி.

சுபம்.

# திருக்கோயில்கள்

## காரமடை

கொங்கு நாட்டில் திருக்கோயில்களில் முக்கியமானதொன்-று காரமடை. இது கோயமுத்தூர் மாவட்டத்தில், கோயம்புத்-தூரிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் பாதையில் உள்ளது. இங்கு தங்குவதற்க்கு விடுதிகளும் சத்திரங்களும் இருக்கின்றன

இவ்வூர் சுற்றிலும் மலைப்பள்ளத்தாக்குகள் நடுவே மேடான பாகத்தில் இருக்கிறது, இக்கோவில் அம்மேட்டின் நடுவில் அமைந்திருக்கிறது, காரைப்புதர்களின் உள்ளே எம்பெருமான் காணப்பட்டதால் காரைவனம் என்ற பெயர் இதற்கு உண்டு. கோவில் கிழக்கு நோக்கி இருக்கிறது. முன்வாயிலில் அழகான கோபுரம அமைந்திருக்கிறது. வடக்கு சொர்க்கவாசல் கோபுரமும் மிகவும் அழகாக அமைந்திருக்கிறது. பெருமானின் திருநாமம் ஸ்ரீ அரங்கநாதஸ்வாமி தாயார் திருப்பெயர் ஸ்ரீ அரங்கநாயகி. பெருமாள் சுயம்பு மூர்த்தி திருமுகம் மாத்திரம் தான் இருக்கிறது.

ஆடுமேய்க்கும் தொட்டியன் ஒருவன் தனது காராம்பசு ஒன்று காட்டில் தன்பால் எல்லாவற்றையும் சொரிந்துவிட்டு வருவது கண்டு அதை தெரிந்து கொள்ள ஒருநாள் அதைப்பின் தொடர்ந்தான் காரைப்புதரில் பால் சொரிவதைக் கண்டான். புத-ரை தன்வாளால் வெட்டினான். உடனே ரத்தம் பீறிட்டுவர மூர்ச்சையானான். பிறகு எழுந்து இறைவன் திருமேனியை புதருள் கண்டான். எம்பெருமாளின் திருமுடியில் வாள்வெட்டு காயம் இன்னமும் இருக்கிறது இதுவே இத்தலத்தின் வரலாறு.

பெருமாள் சன்னதி அர்த்தமண்டபத்தில் அழகுமாதவப்பெருமாள் திருஉருவம் நின்ற கோலத்தில் இருக்கிறது. தெற்குபிரகாரத்தில் கிழக்குநோக்கி அரங்கநாயகித்தாயார் சன்னதி இருக்கிறது அதேபிராகாரத்தில் சந்தானகிருஷ்ணன், பரலாகுதேவர், ஆழ்வாராதிகள் சன்னதிகளும் இருக்கின்றன மேற்குபிராகாரத்தில் பிரம்மதீர்த்தமும், ஸ்தலவிருக்ஷமான காரைமரமும் இருக்கின்றன வடக்குபிராகாரத்தில் ஆண்டாள் தனிச்சன்னதி இருக்கிறது. சிலைதங்கரூபமாய் காக்ஷி அளிக்கிறது. இன்னும் வடக்குபிராகாரத்தில் திருக்கல்யாண மண்டபமும், உடையவர்சன்னதியும் இருக்கின்றன. கோவிலுக்கு மேற்கே சிறிது தூரத்தில்- கருட தீர்த்தம் ஒன்றும் இருக்கிறது. வடக்குநோக்கி அனுமார்சன்னதி இருக்கிறது.

பெருமாள் கர்பகிரஹத்தில் சுவற்றில் உள்ள கோபாலகிருஷ்-ணனும் கோதண்டராமரும் அழகிய வேலைப்பாடு உடையவை.



சன்னதி முன்மண்டபம் தூண்களில் பத்துஅவதாரங்களும் செதுக்கப்பட்டுள்ளன. ஒருதூணில் அழகிய விநாயகரும் காணப்படுகிறார்.

நாள்தோறும் மூன்றுகால பூஜை நிகழ்கிறது. மார்கழியில் பகல்பத்து இராபத்து உற்சவம் நடைபெறுகிறது. மாசிமாதத்-தில் தான் பெரும் திருவிழா ஐந்தாம்நாள் திருக்கல்யாண உற்சவம் அர்ச்சகருக்கு ஆவேசம் வந்து அண்மையில் உள்ள. பெட்டத்தம்மன் மலையிலிருந்து தாயாரை எழுந்தருளப் பண்ணி திருக்கல்யாணம் நடைபெறும். ஏழாம்நாள் திருத்தேர்விழா தேரில் இராமரயணம் முழுவதும் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது

காரமடை ஸ்தலபுராணம் உரைநடைநூல் 1942ல் ஆகம ஆசிரியர் சு. தி.அரங்கநாதாச்சாரியரால் நான்கு அத்தியாயங்-களில் எழுதப்பட்டிருக்கிறது. பிரம்மா, இந்திரன், கருடன் இவர்கள் வழிபட்டு பேறுபெற்றதும் மகாலக்ஷ்மியின் திருக்கல்யா-ணமும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

ராஜபிளவையால் துன்புற்ற மதுரை திருமலைநாயக்க மன்னன் இங்குள்ள பெருமானை வழிபட்டு நோய் நீங்கியதாகவும் அவ-ரால் 1630ல் கோவில் மதில்,மண்டபம் முதலியவைகள் கட்-டப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

ஆதாரம் திருக்கோவில் 2-2

## சமஸ்கிருத பாடம்

ஆண் பால்:-

| ஒருமை | இருமை | பன்மை |
|---|---|---|
| அஜ: | அஜௌ | அஜா: |
| கஜ: | கஜௌ | கஜா: |
| அயம்: | இமௌ | இமே: |
| அச்வ: | அச்வௌ | அச்வா: |
| நர: | நரௌ | நரா: |
| விருக்ஷ: | விருக்ஷௌ | விருக்ஷா: |
| ஸ: | தௌ | தே: |
| க: | கௌ | கே: |
| சூத: | சூதௌ | சூதா: |
| வட: | வடௌ | [illegible] |

| | | | |
|---|---|---|---|
| பெண் பால்:- | பாலா | பாலே | பாலா: |
| | மாலா | மாலே | மாலா: |
| | இயம் | இமே | இமா: |
| | ஜிஹ்வா | ஜிஹ்வே | ஜிஹ்வா: |
| | நாஸா | நாஸே | நாஸா: |
| | ஸா | தே | தா: |
| | கா | கே | கா: |
| | லதா | லதே | லதா: |
| ஒன்றன் பால்:- | பாத்ரம் | பாத்ரே | பாத்ராணி |
| | நேத்ரம் | நேத்ரே | நேத்ராணி |
| | விச்வம் | விச்வே | விச்வானி |
| | குசுமம் | குசுமே | குசுமானி |
| | பலம் | பலே | பலானி |
| | தத் | தே | தானி |
| | கிம் | கே | கானி |
| வினைச்சொற்க்கள்:- | கச்சதி | கச்சத: | கச்சந்தி |
| | திஷ்டதி | திஷ்டத: | திஷ்டந்தி |
| | பலதி | பலத: | பலந்தி |
| | ம்லாயதி | ம்லாயத: | ம்லாயந்தி |
| | பததி | பதத: | பதந்தி |
| | ஸ்புரதி | ஸ்புரத: | ஸ்புரந்தி |
| | விகஸதி | விகஸத: | விகஸந்தி |
| | படதி | படத: | படந்தி |
| | வததி | வதத: | வதந்தி |

கேள்விக்கு பதில் எழுதவும்:-

தௌ கௌ?- தே கே?- கௌ படத:?- கே பதத:?- கே காயத:?- கௌ பலத:?- கௌ கச்சத:? கே விகஸத:?— கே ஸ்புரத:?— கே படத:?—

புதுபதங்கள்:—

ஆ—பால்:— சரண:—கால்!! கட:—குடம்!! புத்ர:—பையன்!! சாத்ர:—மாணவன்!! நட:—நடிகன்!! ஹஸ்த:—கை!! ஹம்ஸ:—அன்னம்!! அசல:—மலை!! ரத:—தேர்!! நாவிக:—ஓடக்காரன்!! ரிஷப:—எருது!! பாத:-கால்!! பெ—பால்!! கன்யா—பெண்!! அங்குலீ-விரல்!! தேவதா-தேவதை!! நௌகா—ஓடம்!! க்ஷேபணீ துடுப்பு!! கசா—சாட்டை!! நாரீ—ஸ்த்ரீ!! தேனு:—பசு!! சாகா கிளை!! ஓ—பால் பர்ணம்—தழை!! த்ருணம்—புல்!! க்ருஹம்வீடு!! க்ஷீரம்—பால்!! மது-தேன்!! தடாகம்-ஓடை!!



வினைச்சொற்கள்:— காயதி—பாடுகிறது கூஜதி—கூவுகிறது நயதி செலுத்துகிறது ஆநயதி-கொண்டுவருகிறது காததி—சாப்பிடுகிறது சரதி—மேய்கிறது ஆரோஹதி—ஏருகிறது தாடயதி—அடிக்கிறது ஆஹ்வயதி கூப்பிடுகிறது பிபதி-குடிக்கிறது த்ருச்யதி—பார்க்கிறது

கேள்வியும் பதிலும்:-

பால. கிம் தவ நாம? உன் பெயர் என்ன? மம நாம ப்ரபுஇதி என் பெயர் பிரபு, கிம் தவ வய:? உனது வயது என்ன? மம வய பஞ்சவர்ஷமிதம்—என்னுடைய வயது ஐந்து. கதி தே ப்ராதர:? உனக்கு எத்தனை சகோதரர்கள்? மம த்ரய: ப்ராதர:— எனக்கு மூன்றுசகோதரர்கள் கதி தெ பகின்ய? உனக்கு எத்தனை சகோதரிகள்? சதஸ்ர பகின்பமே—எனக்கு நான்கு சகோதரிகள் க: தே ஜ்யேஷ்டப் ப்ராதா:? யார் உனது மூத்த சரோதரன்? முரளீ மே ஜ்யேஷ்ட ப்ராதா— முரளீ எனது மூத்த சகோதரன் கா தே ஜ்யேஷ்ட பகினீ? —உனது மூத்த சகோதரி யார்? லதா மே ஜ்யேஷ்ட பகினீ-லதா எனது மூத்த சகேதரி.

ஆகச்ச—வா உபவிச-உட்கார் திஷ்ட—நில் மாகச்ச—போகாதே புஸ்தகம்தேஹி-புத்தகம்கொடு புஷ்பம்நய—மலர்கொண்டுவா பத்திரம்லிக-கடிதம்எழுது ப்ரச்னம்ப்ருச்ச-கேள்வி கேள் பலம்பக்ஷய—பழம் சாப்பிடு உத்திஷ்ட—எழுந்திரு ஹஸ-சிரி கச்ச போ சல-நட விருக்ஷம் பச்ய-மரத்தைப்பார் பலம்ஆநய பழம் கொண்டுவா வாக்யம்வத—வாக்கியம்சொல் பாடம்பட—பாடம்படி லேகினீம் நய—பேனைகொண்டுவா உத்தரம் தேஹி—பதில்சொல் ஜலம்பிப — தண்ணீர்குடி குரும்ப்ரணம— ஆசிரியரை வணங்கு வஸ்த்ரம் தாரய—வஸ்த்திரம் தரித்துக்கொள் பஹி:கேல்—வெளியில் விளையாடு ப்ராதா—சகோதரன் பகினீ—சகோதரி பிதா-தந்தை: மாதா-தாயார்: பித்ருவ்ய-சிறியதகப்பனர்: மாதுல மாமா பிதாமஹ:—தந்தையின்தந்தை மாதாமஹ: தாயாரின்தந்தை பிதாமஹி:—தந்தையின்தாயார் மாதாமஹி:—தாயாரின்தாயார் ஜாமாதா மாப்பிள்ளை புத்ர:-பையன் புத்ரீ-பெண் துஹிதா-பெண் அனுஜ:-தம்பி பௌத்ரீ—பையனின்பெண் தௌஹித்ர—பெண்ணின்பையன் தௌஹித்ரீ—பெண்ணின்பெண்

தொடரும்

## பாஞ்சராத்ராகம ரத்னாகரம் "ஆகமப்பகுதி"

ஸ்ரீய: பதியாய் அவாப்த ஸமஸ்த காமனாய் ஏழுலகும் தனிக் கோல் செல்ல பரமபதத்திலே அநந்தகெருட, விஷ்வக்ஸேந, சண்ட, பிரசண்ட, குமுதாதிகளாலும், நித்யஸூரிகளும், சதா ஸேவித்துக்கொண்டிருக்கும் பரவாஸுதேவனின், மூர்த்தங்கள் உபநிஷத்துகளிலும் ததநுகுணமாக ஸ்ரீ பாஞ்சராத்ரஆகமங்களிலும் ஐந்து விதமாக கூறப்பட்டுள்ளது அதில்

ஸ்ரீபாஞ்ராத்ர மஹோபநிஷத் ஸ்ரீப்ரஸ்ந ஸம்ஹிதையில், பெரிய பிராட்டிக்கு பெருமாள் அருளிச்செய்வதை அனுபவிப்போம்.

"மந்மூர்தய: பஞ்சவிதா வதந்த்யுபநிஷத்ஸு ச! பரவ்யூஹோ ஹார்த இதி விபவோர்சேதி பேதத:!!

எம்பெருமானின் நிலைகள், பரம், வியூஹம், ஆர்தம், விபவம் அர்ச்சை என்றபடியாக ஐந்துவகைப்பட்டதாம் அதில்

"வைகுண்டேஸ்மிந் பரவ்யூஹம் சதா பச்யந்தி ஸூரய:!

பரம், வியூஹம் இந்நிலைகள் ஸ்ரீவைகுண்டத்தில் நித்யஸூரிகள் எக்காலமும் ஸேவித்துக் கொண்டிருப்பது.

"யோகதத் வேந முநய: சதாமாம் த்யாநகோசரா!

பச்யந்தி தேவி ஹ்ருந்மத்யே தஸ்மாந்மாம் ஹார்த உச்யதே!

ஹ்ருதய கமலவாசியான எம்பெருமானை யோகத் தவத்தால் தியான மூலமாக முனிவர்கள் சதா ஸேவித்துக் கொண்டிருக்கும் நிலை! ஹார்தமாகும்.

'அவதாரேஷு தத்காலே பச்யந்தோபி ஜநாபுவி
அவஜாநந்தி முநயோ ஜாநந்தி ஞானினோ ரமே!

அவதாரமூர்த்தங்களான இராம கிருஷ்ணர்களை ஆதிகாலத்திலிருந்த மக்களும் முனிவர்களும் பகவதவதாரமென அறிந்து வழிபட்டநிலை விபவமாகும். இனி அர்ச்சாவதாரநிலை

ஏதாவதுத் காலபர்யந்தம் ஞானிநோ யோகிநோபிவா!
இதரோவா நாப்ய ஜாதந் அர்ச்சாரூபம் வராநநே!

இந்த நாட்கள்வரை ஞானிகளாலும் யோகிகளாலும் மற்றவர்களாலும் அறிந்திராத ஒருநிலை பகவானின் அர்ச்சாரூப நிலை ஆகும்.

தேவோவா மாநுஷோ வாபி புமர்தேஷு சத்ருஷ்வபி!
ஏகம்வா சதுரோவாபி ப்ராத்தயேத் மாம் வாரநநே!



நிஷ்காமோ வா ஸகாமோவா வைகுண்டோபம மந்திரம்!
புண்யக்ஷேத்ரே புராக்ருத்வா தீவ்யா ஸஹஸு மத்யமே!
அர்ச்சாரூபம் பாஞ்சராத்ர விதிநா ஸர்வகாமதம்!!
மந்த்ரமூர்த்திம் ப்ரதிஷ்டாப்ய மந்திராந்தர்கதம் ஹரிம்!
தச்சாஸ்த்ரோக்த புராதீக்ஷாம் க்ருத்வா தேசிக ஸத்தம:!
பூஜயேத்யதி மத் பிம்பம் வேத வேதாங்கபாரகம்:!
அஹம் தத் பிம்ப மாவிச்ய பக்தாநாம் இஷ்டஸாதக:!
த்வயா ஸஹ பவிஷ்யாமி நாத்ர ஸந்தேஹ அஸ்துதே!

புண்ணியஸ்தலம் முதலான இடங்களில் நிஷ்காமமாகவோ ஸகாமமாகவோ தேவர்களாலோ மனுஷ்யர்களாலோ ஸ்ரீவைகுண்டத்திற்கொப்பான ஸ்ரீபாஞ்சராத்ர விஹிதமாக ஸந்நிதி (கோவில்) அமைத்து அதில் வேத வேதாங்கத்தில் சிறந்தவர்களான அர்ச்சகர்கள் ஸ்ரீபாஞ்சராத்ர ப்ரகாரமாக தீக்ஷை பெற்று ஸ்ரீபாஞ்சராத்ர ஜெயாக்ய பாத்ம ஸம்ஹிதாப்ரகாரமாக ஸ்ரீதேவி பூமிதேவிகளோடு ஸ்ரீமந்நாராயணனை பிரதிஷ்டை செய்து (அல்லது வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்களான நான்கு மூர்த்திகளையோ பிரதிஷ்டை செய்து அக்கோவிலிலுள்ள மந்திரமூர்த்தியை ஆராதித்து வந்தால் அந்த ஸந்நிதியில் கோவில் கொண்டுள்ள எம்பெருமான் தன்னை வழிபடும் பக்தர்களுக்கு வேண்டுவார் வேண்டுவனவற்றை அளித்துக் கொண்டிருக்கிறான் என்பதில் சந்தேகமேயில்லை என்றபடி அர்ச்சா நிலையாகும்.

தொடரும்.........

பின் குறிப்பு:-மந்திரமூர்த்தி என்பதால் மந்திர ஸித்தாந்தமான ஜெயாக்ய பாத்ம ஸம்ஹிதை சொல்லப்பட்டது.

**ஸ்ரீபாஞ்சராத்ரவித்வான் ஆகமஸார்வபௌம**
**பெரிய திருவடிபட்டர் காஞ்சிபுரம்**

## செய்திகள்

அர்ச்சக கல்பதருவின் ஆசிரியர் குழுவிலுள்ள ஸ்ரீஅலங்காரம் தேவராஜ அய்யங்கார் ஸ்வாமி அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்துறையில் ஈடுபட்டதை முன்னிட்டு பாராட்டப்பட்டார்.

வரும் 10.3.86முதல் 12.3.86முடிய செட்டிபாளையம் ஸ்ரீ பெருமாள்ஸன்னதி மஹாஸம்புரோக்ஷணம் நடைபெறும்.

நாரதபகவானுடைய அஷ்டோத்திரமும் ஸஹஸ்ரநாமமும் இலவசமாக பெற அடியிற்கண்ட விலாசத்திற்கு 50பைசா ஸ்டாம்புடன் தொடர்பு கொள்ளவும்.

அ. செல்லபதி
ஸ்ரீநாரத நிவாஸ்
554 N.V.N நாயுடு லே அவுட்

ஸ்ரீ

## பகுத்தறிவால் உயர்ந்த பக்தர்

உலகை ஆக்கி, அளித்து, அழித்து, அளவிலா விளையாட்டைச் செய்பவன் ஆண்டவன். அவனது படைப்பில் தான் எத்தனை விநோதம்! தாவரங்கள்; தண்ணீரில் நீந்துவன; தரையில்ஊர்வன; மண்ணில்நடப்பன; விண்ணில்பறப்பன; முதலிய உயிரினங்கள்தான் எத்தனை விதம்! அவற்றில் எத்தனை,எத்தனை வடிவங்கள்! எத்தனை, எத்தனை வண்ணங்கள்! ஒன்றைப் போல் மற்றொன்று இல்லையே! இதென்ன வேடிக்கை! அவைகளைப் போலத்தானே மனிதனையும் ஈசன் படைத்திருக்கிறான். ஆனால் மற்றஉயிரினங்களுக்கு இல்லாத பகுத்தறிவு மனிதனுக்குமட்டும் உண்டு இது ஈசனால் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட சிறப்பாகும்.

ஈசன் இவ்வளவு சிறந்த அறிவை மனிதனுக்கு மட்டும் ஏன் கொடுத்தான்? பகுத்தறிவால் தன்னைக் காணவன்றோ கொடுத்திருக்கிறான். இதை எந்த ஒரு மனிதனாவது சிந்திக்கிறானா? பகவானால் கொடுக்கப்பட்ட பகுத்தறிவை மனிதன் பலவழிகளில் பயன்படுத்துகிறான். இத்தனை உயிரினங்களைக் கண்ணாரக் கண்டும், உயிரினங்கள் அனைத்தும் பிறப்பதும் இறப்பதும் உணர்ந்தும் இது எவ்வாறு நிகழ்கிறது? என்பதையும் யாரால் நிகழ்கிறது என்பதையும் நம்மில் பெரும்பாலோர் ஆராய்வதில்லையே? அவ்வாறு ஆராய்பவர் மிகச்சிலரேயன்றோ? இவ்வாறு பகுத்தறிந்தவர் மதங்கள் பலவற்றிலும் உண்டு. இதுபற்றி பக்தவிஜயத்தில் உள்ள வரலாறு ஒன்றினைக் காண்போம்

பகுத்தறிவால் உயர்ந்தவர் பக்த லதீப்ஷா, லதீப்ஷா முகமதியர். அவர் பல மத நூல்களையும் படித்தார். அவற்றில் பாகவதமும் பகவத்கீதையும் அவரது உள்ளத்தை கவர்ந்தன. அவர் திருமாலடியரானார். அல்லும் பகலும் ஹரிபஜனை செய்பவரானார். தினமும் திருமாலைப் பூஜித்தார்.

இவரது செயலைக் கண்ட இஸ்லாமியர் மிகுந்த கோபம் கொண்டனர். அப்பொழுது அரசாண்ட முகமதிய அரசனிடம் போய் முறையிட்டனர். லதீப்ஷா நம் மதத்தை விட்டு வேறு மதத்தை தழுவினர். அவரைத் தண்டித்து மறுபடியும் நம்மதத்தில் சேர்க்க வேண்டும் என்று அரசனிடம் முறையிட்டனர்.

அரசன் அவர்களை நோக்கி நமது மதத்திற்கு விரோதியான லதீப்ஷாவின் வீட்டில் புகுந்து அங்கு உள்ள பொருட்களை எல்லாம் கொள்ளையடியுங்கள் என்று உத்திரவிட்டான். அவர்களும் அப்படியே போய் லதீப்ஷாவின் வீட்டில் புகுந்தனர். அங்கு சாந்தமே உருவாகியிருந்த லதீப்ஷாவைக் கண்ட



அவர்களும் பரமசாந்தமுடையவர்களாக மாறினர். தங்களை தாங்களே இகழ்ந்து கொண்டனர். அவர்கள் அரசரின் ஆணை கொடியது என்று எண்ணி அதனை விடுத்து இவரிடத்தில் தங்கி இருந்து கீதோபதேசம் கேட்டுக் கடைத்தேறினர்.

இந்த செய்தி அரசனுக்கு எட்டியது. கோபத்தீயால் அவன் உள்ளம் கொதித்தது. அவனது கண்கள் கனலைக் கக்கின. அவனது வாயிலிருந்து வரும் சொற்கள் ஒவ்வொன்றிலும் தீப்பொறிகள் தெறித்தன. தனியாக் கோபத்தோடு தானே நேரில் சென்று அவரை வருத்த வேண்டுமென நினைத்தான். எழுந்தான் விரைந்து நடந்தான். லதீப்ஷாவின் வீட்டினுள் நுழைந்தான்.

அப்பொழுது லதீப்ஷா பாகவத பாராயணம் செய்து கொண்டிருந்தார். அதை சற்று நின்று அரசன் கேட்டான். அவரது வீட்டின் சுவர்முழுவதும் திருமாலுடைய தசாவதாரம் முதலிய சித்திரங்கள் எழுதப்பெற்றிருந்தன. அதைப்பார்த்து அரசன் ஆச்சரியப்பட்டான். அந்த சித்திரங்களுக்குள்ளே கண்ணபிரானுக்கு இராதை வெற்றிலை மடித்து கொடுப்பது போன்றஓவியம் ஒன்றிருப்பதை அரசன் நோக்கினான். "இராதை வெற்றிலைச் சுருள் மடித்துக் கையில் வைத்துகொண்டிருக்க கண்ணபிரான் ஏன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை'; என்று குறும்பாக லதீப்ஷாவைக் கேட்டான்.

லதீப்ஷா கண்ணபிரானை மனதினால் தியானித்தார். ;;ஹே பக்தவத்ஸலா! பரமகருணாநிதே! அடியேன் பொருட்டு இராதாபிராட்டியார் ஏந்தி நிற்கிற வெற்றிலைச் சுருளை தேவரீர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பிரார்த்தித்தார். ஓவிய உருவாய் இருந்த கண்ணபிரான் தன் திருப்பவளச்செவ்வாய் திறந்து வெற்றிலைச் சுருளை வாங்கிக் கொண்டான்.

இதைக்கண்ட அரசன் மிகவும் அதிசயித்தான். ஓவியத்திலிருந்த கண்ணன் வாய் திறந்ததும் ஓவியமாயிருந்த இராதை வெற்றிலைச்சுருளை வாயிலிட்டதும் மிகவும் வியப்பாக இருக்கிறதே: என்று ஸ்தம்பித்து நின்றான். அவரது மகிமையை உணர்ந்தான். புகழ்ந்தான் கொண்டாடினான் லதீப்ஷாவின் அடிமலரில் விழ்ந்து வணங்கினான். உமது பெருமை தெரியாமல் உம்மை வருத்த வேண்டுமென வந்தேன். நான் செய்த தீங்கை பொருத்தருளும் என்று அவரிடம் ஆசி பெற்று சென்றார்.

கபீர்தாசரைப் போன்று பக்த லதீப்ஷாவும் பகுத்தறிவால் பரமனை உணர்ந்து உயர்ந்து விளங்குகிறார். இதிலிருந்து கடவுளை காண்பது ஒன்றே சிறந்த பகுத்தறிவு பெற்றதின் பயனாகும் என்பதை உணர்வோமாக!.

அலங்காரம் தேவராஜன். ஸ்ரீவில்லிபுத்தூர்.

ஸ்ரீ

## அர்ச்சக பெரியோர்களுக்கு ஒரு வேண்டுகோள்:-

மஹநீயர்களே! ஆராதகர்களாகிய நீங்கள் பகவதம்ஸம் பெற்றவர்கள். ஆராதகர்கள் பக்தியுடனும் சிரத்தையுடனும் பகவானை பூஜிப்பார்களேயானால் அக்கோவிலும் அவ்வூரும் நம் நாடு முழுவதும் கூட மேன்மை அடையும். என்பது மிக உறுதி. அந்த அர்ச்சகர்களும் மிகுந்த மரியாதையுடன் போற்றப்படுவார்கள்.

அவர்களுடைய முன்னேற்றத்திற்க்காகவே ஆரம்பிக்கப்பட்டது இந்த ''அர்ச்சக கல்பதரு'' இதை பேணிகாப்பது ஆராதகர்களாகிய உங்கள் பொறுப்பு இப்பத்திரிக்கை வளர எல்லா விதமான உதவிகளையும் புரிவதும் உங்கள் கடமையேதான். ஆகையால் நீங்கள் உங்கள் சந்தாவை உடனே அனுப்புவதுடன் மற்றவர்களையும் சந்தாதாரர்களாக சேர்ந்து பத்திரிக்கையை வளர்ப்பீர்கள் என்று நம்புகிறோம். இங்ஙனம்,

ஆசிரியர்குழு அர்ச்சக கல்பதரு.

## அர்ச்சகர் யார் எவர்

கொங்கு நாட்டில் புகழ் வாய்ந்த புனிதஸ்தலங்களில் காரமடை ஒன்று அங்கு திருக்கோயில் குடிகொண்டிருக்கும் அருள்மிகு அரங்கநாதருக்கு மகாத்மாவும் பேரறிஞரும் ஆன ஸ்ரீரங்க அய்யங்கார் என்பவர். மிகுந்த பக்தி, சிரத்தையுடன் கைங்கர்யம் செய்து வந்தார். அவரது புதல்வர்களில் ஸ்ரீநாராயண அய்யங்கார் என்னும் பெரியார் பொதுக் கல்வியிலும் ஆகம சாஸ்திரங்களிலும் வல்லவராகவும், பொது ஜனப்பிரியராகவும் இருந்தார். அவரது காலத்தில் சன்னதியில் பல முன்னேற்றங்களை செய்து தன்னையே பகவானுக்கு அர்ப்பணித்து வந்தார். பகவானுடைய பரிபூரண கிருபையால் அவருக்கு மூன்று புதல்வர்கள் உண்டாயினர். அவர்களில் ஸ்ரீரகுநாதன் என்பவர் தன் தந்தையைப் போலவே பகவத் கைங்கர்யத்தில் ஈடுபட்டு பகவானுடைய கைங்கர்யத்திலும் ஆலய முன்னேற்றத்திலும் இரவு பகல் பாராது கைங்கர்யம் செய்து பொது மக்களாலும் தேவஸ்தான தர்மகர்த்தாக்களாலும் அதிகாரிகளாலும் போற்றப்பட்டு சிறந்து விளங்குகிறார். அவர் தனது உடல்நிலைகளையும் பாராது பகவானுடைய கைங்கர்யத்திலேயே மனம் செலுத்தி தன் வாழ்நாளை கழித்து வருகிறார்.

அன்னாரின் அன்பும் பக்தியும் சிரத்தையும் கூடிய இடைவிடா கைங்கர்யத்தில் உகந்த ஸர்வேஸ்வரன் அவருக்கு நீண்ட ஆயுளும் உடல் வலிமையையும் உண்டாக்குவான் என்பதில் சம்



## கேள்வி-பதில்:-

பிரபு-கோவை

ஆராதன காலத்தில் அர்ச்சகர்கள் என்ன என்ன செய்யக் கூடாது?

பதில்:-

அகுருத்யன் நத்ரவன் ஆர்த்ர மகுர்வம்ஸ்ச மஹீதலம்! அஸப்தயன்! பாத்ரசங்கம் பாலாநனுலாபயன்! ஹூங்காரம் ரோதனம் ஹாஸம் நித்ராமாலஸ்ய பாஷணம்! பகவத்வதனம்போஜம் ஹித்வாந்யத்ராவலோகனம்: ஏதாநன்யாப சாரான் பூஜாகாலே விஸர்ஜயேத்!!

நேர்மை வாய்ந்த அர்ச்சகர் பகவானை ஆராதிக்கும் காலத்தில் கீழ்ச் சொல்லியவைகளை செய்யக்கூடாது. கோபம்கொள்ளுதல் ஆத்திரப்படுதல், பூமியை நனைத்து ஈரம் பண்ணுதல் பாத்திரங்களை சப்தப்படுத்துதல், குழந்தைகளை கொஞ்சுதல், கூச்சல்போடுதல், அழுதல் பரிகாஸம்செய்தல், தூங்குதல், சோம்பேறிதனமாக பேசுதல், பகவானுடைய திருமுகமண்டலத்தை தவிர மற்றவைகளை பார்த்துக்கொண்டிருத்தல் இது போன்ற அபசாரங்களை செய்யக்கூடாது.

C. ஜெகநாதநாயுடு, பா. நா. பாளையம்.

ஸன்னதிக்கு ஸமீபத்தில் மரணாஸௌசம் ஏற்பட்டால் பகவானுக்கு பூஜைகள் செய்யலாமா?

பதில்:- ஆரப்தே பூஜநே விப்ரா: கிராமஸ் சேத்சவ தூஷிதே ஆரப்த பூஜநம் சீக்ரம் குர்யாத் தந்த்ரேண தேசிக:! ப்ராக்வத் க்ராம ப்ரோக்ஷணம் கிருத்வா புந: பூஜந மாசரேத்!!

கிராமங்களிலே பூஜை ஆரம்பித்த பிறகு மரணா சௌசம் ஏற்பட்டால் ஆரம்பித்த பூஜையை விரிவில்லாமல் முடிக்க வேண்டும் பிறகு ப்ரோக்ஷணங்களை செய்துவிட்டு பூஜிக்கவேண்டும்.

சதுஸ்ஸத பிராம்மணஸ்து யுக்தே க்ராம புராதிகே: அந்த ஸ்ஸவேபி நைவாஸ்தி கிராஸௌசம் முனீஸ்வரா:!

400க்கும் மேற்பட்ட சந்தியாவந்தனாதிகள் செய்யும் அந்தணர்கள் இருந்தால் அந்த இடத்திற்கு தீண்டல் கிடையாது

இது விதிவிலக்கு சுமார் 100கஜத்திற்குள் ஆசௌசம் ஏற்பட்டால் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

S. கிருஷ்ணமூர்த்தி தேவஸ்தானமணியம் காரமடை.

ஆராதனகாலத்தில் மிகவும் முக்கியம் வாய்ந்த முத்திரைகளை விரிவாக வெளியிடுவீர்களா?

ஆகமப்பகுதியில் முத்திரைகள் என்று வரும்பொழுது அவைகளை விரிவாக வெளியிடப்படும்.

## சரணாகதியின் மகிமை

எவனொருவன் தன்னை காப்பாற்றிக் கொள்ள தனக்குத்தகுதி இல்லை என்றும் தன்னைவிட தன்னைக் காப்பாற்றுகிற விஷயத்தில் பகவானுக்கு திறமையும், பொறுப்பும் இருக்கிறது என்றும் எவன் உணருகிறானோ அவனே சரணாகதி செய்யத் தகுதி வாய்ந்தவன்,

சரணாகதி செய்த பிறகும் ஒருவனிடமுள்ள தீய பழக்கங்கள் விலகவில்லையானால் அவன் உண்மையான சரணாகதி செய்யவில்லை என்றும் அவனை பகவான் ஏற்கவில்லை என்றும் அறிய வேண்டும். பகவான் ஒரு ஜீவனை ஏற்றபிறகு தீய பழக்கங்களில் போக விடமாட்டான்.

ஒரு வேலையால் தன் எஜமானனுக்கு பிடிக்காததை செய்ய அஞ்சுவான். அதுபோல பகவானை சரணாகதி செய்த பிறகு ஒரு பக்தன் வெறுக்கத்தக்க தீயகுணங்களை பகவானுக்கு பிடிக்காது என்று விட்டுவிடுவான்.

ஒரு வேலையாள் தன் எஜமானருக்கு அனுகூலமானவற்றையே சிந்தித்துக் கொண்டிருப்பான். அது போல் பக்தனும் தன் ரக்ஷகனான பகவானுக்கு அனுகூலமானவைகளையே செய்ய விரும்புவான்.

ஒருவருக்கொருவர் நம்பிக்கை இல்லாமல் செய்யும் நட்பு உலகில் நீடிப்பதில்லை அது போல திடநம்பிக்கை இல்லாமல் பகவானை சரணமடைந்தவன் கூடிய சீக்கிரம் பகவானை மறந்து விடுவான். (இன்னும் வரும்)

**ஆகம சம்பந்தமான கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. தகுதி வாய்ந்ததற்கு சன்மானம் கொடுக்கப்படும் ஆசிரியரும் வெளியிடுபவரும் ஸ்ரீ. ரங்கநாத[illegible]**

ஆகமஆசிரியர்
2/1 நேதாஜிரோடு பா. நா. பாளையம்.
கோவை-641037.
அச்சிடுபவர்:- V. ஜெகந்நாதன்
சாந்தாராம் பிரஸ் 680 100அடிரோடு
காந்திபுரம் கோவை-12

Released by Maran's Dog ,Toronto, Canada

"WITH US QUALITY IS NEVER AN ACCIDEN";
IT IS ALWAYS THE RESULT OF INTELLIGENT EFFORTS

**Sri Jaganatha Textiles Limited**
POST BOX NO 2072
Ganapathy Post, Coimbatore-641 006

Released by Maran's Dog ,Toronto, Canada

Phone : Office : 25511/12/13 Grams :JAGYARN
Mills : 388 (Palladam)

Manufacturers Of :
Top Quality Warp And Hosiery Yarns